DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 271/2018 |
| Deposition of witness | : | P W- 9 |
| Name | : | சக்திபாலன் |
| Father's /Husband Name | : | முருகேசன் |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 38 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day June, 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவமனையில் பணி புரிந்து வருகிறேன். கடந்த 13.06.2018 ம் தேதி காலை 10.45 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 35 வயது மதிக்கத்தக்க முத்துகுமார் என்னிடம் மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரை நான் பரிசோதித்த போது சுயநினைவுடன் இருந்தார். அவரது வயிற்றின் இடது பக்கத்தில் 6X7X3 அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது. அவருக்கு நான் ஸ்கேன் எடுத்த பார்த்த போது வயிற்றில் உள்பகுதியில் இரத்தகசிவு இருப்பது கண்டறியப்பட்டது. அதற்கு அறுவைசிகிச்சை மேற்கொண்டு சரி செய்யப்பட்டது. மேற்படி நபருக்கு திருவாரூர் அரசு மருத்துவமனையில் பதிவு செய்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய காயச்சான்று **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

மேற்படி காயமடைந்த நபர் பூந்தோட்டம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில்தான் முதலுதவி சிகிச்சை பெற்றுள்ளார் என்றால் சரிதான். அங்கு வெளிநோயாளி அனுமதி சீட்டு பதியப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த சீட்டின் நகல் எனது மருத்துவ கோப்பில் இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல இணைக்கப்பட்டுள்ளது. மருத்துவ பதிவு எண் சீட்டுதான் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல நான் தற்போது வைத்துள்ளதுதான் அனுமதி சீட்டாகும். முதலுதவி சிகிச்சை அளித்துள்ள மருத்துவர் தான் காயங்கள் குறித்து கருத்துரை வழங்க தகுதியான நபர் என்றால் சரியல்ல. முதலுதவி சிகிச்சை என்பதும் புறநோயாளி சிகிச்சை என்பதும் வேறு வேறு அர்த்தங்கள் கொண்டவை என்றால் சரிதான். நான் விபத்து பதிவேடு பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வயிற்றில் இல்லாத காயத்திற்கு நான் சிகிச்சை அளித்தேன் என்றால் சரியல்ல. ஸ்கேன் ரிப்போட்டை காயச்சான்றுடன் இணைக்கவில்லை என்றால் அவ்வாறு இணைப்பது வழக்கமில்லை அதனை நோயாளியின் மருத்துவ கோப்புடன் வைத்து பராமரிப்பது தான் வழக்கம். காயப்பட்ட

நபரின் வயிற்றின் மேற்பகுதியில் வாகனம் ஏறியதற்கான தடங்கள் காணப்பட்டதால் என்றால் இல்லை. கீழே விழுந்து கற்கள் குத்தினாலும் மேற்படி நபருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M
S BHARATHIDHASAN
DN: cn=M S
BHARATHIDHASAN,
ou=TIRUVARUR,
o=TAMIL NADU
STATE JUDICIAL
SERVICE,
st=Tamilnadu, c=IN
Date: 2025.06.05
15:29:58 +0530